**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண். 628 /2024 நாள்- 19.01.2026

**பி.வா.சா.1 ராஜா**

**<u>பி.வா.சா.1-ன் குறுக்குவிசாரணை வாதி தரப்பில்</u>**

நான் புதிதாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் புதிய வீட்டில் குடியேறுவததற்கு முனபாக பொன்னையா மகன் ராஜதுரை என்ற அறிவழகன் வீட்டில் வாடகைக்கு குடியிருநது வந்தேன் என்றால் சரிதான். நான் தற்போது மகளிர் குழுவில் வேலை பார்த்து வருகிறேன். இதற்கு முன்பாக சேத்தூர் முத்தூட் பினான்ஸசில் வேலை பார்த்து வந்தேன். ராஜதுரை என்ற அறிவழகன் வாதியின் உடன்பிறந்த சகோதரர் ஆவார். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் ்என்னுடைய கையொப்பம் என்றால் இல்லை.முததூம் பைனான்ஸ் நிறுவனத்தில் உள்ள என்னுடைய கையொப்பங்களையும் வேறு ஆவணங்களையும் உள்ள கையொப்பங்களையும் கடனுறுதி சீட்டில்உள்ள கையொப்பத்தையும்ஒப்பிட்டு பார்த்ததால் என்னுடைய கையொப்பமா என்று தெரியவரும் என்றால் சரிதான்.நான் புதிய வீடு கட்டுவதற்காக நான் வாதியிடன்ம ரூ200000/-கடன் பெற்றேன் என்றும் அதற்காக தான் வாசா.ஆ 1 கடனுறுதி சீட்டில் நானும் என் மனைவியும் கையொப்பம் செய்து எழுதிக் கொடுத்தோம் என்றால் இல்லை. வக்காலத்தில் உள்ள 2வது கையொப்பம் என் மனைவியின் கையொப்பம். வழக்க தொகையை கேட்டு வாதி எனக்க வழககறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை என் மனைவி பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்ப்மும் வக்காலத்தில் உள்ள கையொப்பமும் ஒன்று போல் தான் உள்ளது எனறு சொன்னால் வித்தியாசமாக

உள்ளது. நான் பொய் சொல்கிறேன் என்றும் இரண்டு கையொப்பங்களும் ஒன்று போல தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அறிவிப்புஅனுப்பவில்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் கடன் பெற்றதால் தான் வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. பதில் வழக்குரையில் வாதியின் சகோதரர் வீட்டில் குடியிருந்து வந்தேன் என்று கூறவில்லை. வா.சா.ஆ.1ல் ரூ.200000/- என்று எழுத்தாலும் எண்ணாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் உறவுக்காரர் பூமாரி என்பது எனக்கு தெரியாது. சாட்சி பூமாரியை எனக்கு தெரியும் என்றும் வழககிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்து கடன் பணம் பெற்றுகக் கொண்டோம் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறோம் என்றும் வாதி கோரியபடி வாதிக்கு உரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.